# பாதீடு - 2026




# இம்புல்பே பிரதேச சபை

# தொலைநோக்கு

"செழிப்பான அழகிய நகரம்"

# பணிக்கூற்று

"அதிகாரங்கள், செயல்பாடுகள் மற்றும் குடமைகளை திறம்பட மேற்கொண்டு மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதே எமது பணியாகும்"

# பொருளடக்கம்


| தொ இல | | விபரம் | பக்க இல |
|---|---|---|---|
| 1. | | தவிசாளரின் செய்தி | 01 |
| 2. | | செயலாளரின் செய்தி | 02 |
| 3. | | இம்புல்பே பிரதேச சபையின் அமைவிடம், பின்னணி, நிர்வாகம் | 03 |
| 4. | | புள்ளிவிபரவியல் | 05 |
| 5. | | ஆளணி தகவல்கள் | 06 |
| 6. | | நிர்வாக கட்டமைப்பு | 07 |
| 7. | | 2026 ஆம் ஆண்டு வேலைத்திட்ட பாதீட்டை உறுதிப்படுத்தல் | 08 |
| 8. | | மீண்டெழும் வரவு சாராம்சம் | 09 |
| 9. | | மீண்டெழும் செலவு சாராம்சம் | 10 |
| 10. | | மீண்டெழும் மூலதன கிடைப்பனவு மற்றும் கொடுப்பனவு சாராம்சம் | 11 |
| 11. | | வரவு சாராம்சம் மற்றும் மதிப்பீடு | 12 |
| | a) | வேலைத்திட்ட இல 01 பொது நிர்வாகம் | 13 |
| | b) | வேலைத்திட்ட இல 02 சுகாதார சேவை | 15 |
| | c) | வேலைத்திட்ட இல 03 பௌதீக திட்டமிடல் வீதி மற்றும் கட்டிடம் | 17 |
| | d) | வேலைத்திட்ட இல 04 நீர் சேவை | 19 |
| | e) | வேலைத்திட்ட இல 05 பொது மக்கள் பயன்பாடு | 21 |
| | f) | வேலைத்திட்ட இல 06 நலன்புரி சேவைகள் | 23 |
| 12. | | செலவு சாராம்சம் மற்றும் மதிப்பீடு | 25 |
| | a) | வேலைத்திட்ட இல 01 பொது நிர்வாகம் | 26 |
| | b) | வேலைத்திட்ட இல 02 சுகாதார சேவை | 30 |
| | c) | வேலைத்திட்ட இல 03 பௌதீக திட்டமிடல், வீதி மற்றும் கட்டிடம் | 33 |
| | d) | வேலைத்திட்ட இல 04 நீர் சேவை | 36 |
| | e) | வேலைத்திட்ட இல 05 பொது மக்கள் பயன்பாடு | 39 |
| | f) | வேலைத்திட்ட இல 06 நலன்புரி சேவைகள் | 41 |



# தவிசாளரின் செய்தி

மலரும் 2026 ஆம் ஆண்டு புத்தாண்டு நல்வாழ்த்துக்களை தெரிவிப்பதோடு இம்புல்பே பிரதேச சபையின் 8வது அமர்வின் முதல் வரவு செலவுத் திட்டத்தையும், இம்புல்பே பிரதேச சபையின் தலைவராக நான் நியமிக்கப்பட்ட பிறகு சமர்ப்பிக்கப்படும் முதல் வரவு செலவுத் திட்ட ஆவணத்தையும் உங்களுக்கு வழங்குவதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

கௌரவ ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க மற்றும் தற்போதைய அரசாங்கத்தின் கொள்கைகள் மற்றும் திட்டங்களை செயற்படுத்தி, போதை பொருளற்ற நீதி, சமத்துவமானதுமிக்க சமூகத்தை உருவாக்குவதிலும், கிராமப்புற வறுமையை ஒழிப்பதிலும், க்ளீன் ஸ்ரீ லங்கா வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தி பொதுமக்களுக்கு சிறந்த சேவை வசதிகளை வழங்குவதற்காக எனது பூரண பங்களிப்பையும் சபை உறுப்பினர்கள், செயலாளர் மற்றும் ஆளணியினர் உள்ளிட்ட ஏனைய அரச, தனியார் நிறுவனங்கள் மற்றும் பொதுமக்களின் அர்ப்பணிப்பு, ஒத்துழைப்புடன் எதிர்வரும் ஆண்டின் இலக்குகளை அடைய ஆவலுடன் காத்திருக்கிறேன்.

எதிர்வரும் ஆண்டில் கழிவு முகாமைத்துவம், கிராமப்புற வீதி பராமரிப்பு மற்றும் அபிவிருத்தி, சுற்றுலா தலங்களை அபிவிருத்தி செய்து சுற்றுலாப் பயணிகளுக்குத் தேவையான சேவை வசதிகளை வழங்கல் பிரதேச சபையின் வருமானத்தை அதிகரித்தல் போன்றவற்றிற்கு அதிக பங்களிப்பை வழங்குவதோடு பெலிஹுல்ஓய சுற்றுலா வலயத்தை அண்மித்து பல சுற்றுலாத் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு வருகின்றன.

2026 வரவு செலவுத் திட்டத்தைத் தயாரிப்பதில் சகல வழிகளிலும் உதவியை வழங்கிய கௌரவ உப தவிசாளர் உள்ளிட்ட சபை உறுப்பினர்கள், பிரதேச சபை செயலாளர் மற்றும் ஊழியர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஏ.எம்.எஸ்.ஏ. பண்டார
தவிசாளர்
இம்புல்பே பிரதேச சபை



# செயலாளரின் செய்தி

“செழிப்பான அழகிய நகரம்” என்ற தொலைநோக்கத்தை அடையும் நோக்குடன் பிரதேச மக்களின் கல்வி, சுகாதாரம், சுகாதாரம், பொது பயன்பாடு சேவைகளை தரமானதாகவும் வினைத்திறனுடனும் மேற்கொள்ளும் வகையில் 2026 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றேன்.

இம்புல்பே பிரதேச சபை இதுவரை வழங்கிய சேவைகளை தொடர்வதுடன், சட்டத்தால் நிர்ணயிக்கப்பட்ட எல்லைகளுக்கு உட்பட்டு அதன் வருமான இலக்குகளை அடைவதற்கும், நிதி ரீதியாக ஸ்தீரதன்மையான உள்ளூராட்சி மன்றமாக மாறுவதற்கும், 13 பிரதேச சபை பிரிவுகள் உள்ளடங்கும் வகையில் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு தேவையான வேலைத்திட்டங்களை ஒழுங்கமைப்பதற்கும் செயல்படுத்துவதற்கும் எதிர்பார்க்கின்றேன்.

2026 பாதீட்டை தயாரிப்பதற்கு வழிகாட்டிய கௌவர தவிசாளருக்கும், தேவையான தகவல்களையும் ஆதரவையும் வழங்கிய கௌரவ சபை உறுப்பினர்களுக்கும், ஊழியர்களுக்கும், ஆலோசனைகளையும் யோசனைகளையும் சமர்ப்பித்த அனைவருக்கும், மும்மொழிக் கொள்கையை செயற்படுத்தி தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த இரண்டு மொழிபெயர்ப்பாளர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மலரும் 2026 ஆம் ஆண்டு உங்கள் அனைவருக்கும் மகிழ்ச்சியும் செழிப்புமும் மிக்க நல்ல நம்பிக்கைகள் நிறைந்த இனிய புத்தாண்டாக அமைய வாழ்த்துக்கின்றேன்.

ஜே.ஜீ.எஸ். விக்ரமசிங்க
செயலாளர்
இம்புல்பே பிரதேச சபை

# இம்புல்பே பிரதேச சபையின் அதிகார எல்லையின் அமைவிடம், பின்னணி மற்றும் நிர்வாகம்

சப்ரகமுவ மாகாணத்தின் இரத்தினபுரி மாவட்டத்தில் வடக்கு எல்லையாக இம்புல்பே பிரதேச சபை அமைந்துள்ளது. இது வடக்கில் நுவரெலியா மாவட்டத்தின் அபகமுவ பிரதேச சபையின் எல்லையும், கிழக்கில் பதுளை மாவட்டத்தின் ஹல்துமுல்ல பிரதேச சபை எல்லையும் தெற்கில் பலாங்கொடை பிரதேச சபை மற்றும் பலாங்கொடை நகர சபை எல்லைகளையும், மேற்கில் இரத்தினபுரி பிரதேச சபை எல்லையையும் கொண்டுள்ளது. சுமார் 25,600 ஹெக்டேயர் நிலப்பரப்பில் 13 பிரதேச சபை பிரிவுகள், 50 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் 256 கிராமங்கள் அமைந்துள்ளன.




பிரதேச சபையின் எல்லையில் வறண்ட, ஈரமான மற்றும் இடைநிலை காலநிலையை காணலாம். சாதாரண சராசரி வெப்பநிலை 25 பாகை செல்சியஸ் ஆவதோடு வட பகுதியில் இவ்வெப்பநிலை 20 பாகை செல்சியஸ் வரை குறைவடைகின்றது. தென்மேற்கு மற்றும் வடமேற்கு பருவமழை பொழிவதோடு வருடாந்தம் 2000 மில்லி மீற்றர் முதல் 4500 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகின்றது.

வரலாற்று மற்றும் தொல்லியல் தகவல்களின்படி இம்புல்பே பிரதேச சபை கி.மு. இரண்டாம் நூற்றாண்டு வரை நீண்டு செல்லும் வரலாற்றுப் பின்னணியைக் கொண்டுள்ளதுடன் இராவணன் சகாப்தம் வரை தகவல்களை நாட்டுப்புறக் கதைகள் மூலம் அறியலாம். இச்சபையானது கடவத கோரளையில் உடுவக்கம் பத்துவ மற்றும் தலாபிட்டகம்பத்துவ ஆகியவற்றை இணைத்து 1987 ஆம் ஆண்டு இலக்கம் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்டுள்ளது.

பண்டைய காலங்களில் கடவத்த கோரளையின் உடுவக்கம் பத்துவின் கிராம சபை அலுவலகம் மொரஹெல பிரதேசத்தில் அமைந்திருந்ததுடன் திரு. ரத்மலவின்னே முதலிஹாமி என்பவர் முதல் உறுப்பினராக செயற்பட்டுள்ளதுடன் பின்னர் திரு.பி. பேலிஸ் குரே என்பவர் உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டுள்ளார். தலாபிடகம்பத்துவ கிராம சபை அலுவலகம் பெலிஹுல் ஓயா பிரதேசத்தில் அமைந்திருந்ததுடன் அதன் முதலாவது உறுப்பினராக புவக்கஹவெல என். ஏ. திரு.சார்ல்ஸ் அப்புஹாமியும் பின்னர் முத்தெட்டுவேகம திரு. எஸ்.எம். பண்டே மற்றும் திரு. ஜி.டி.பி. புஞ்சி மஹாத்தயா அவர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். 1980ல் கிராம சபை முறை ஒழிக்கப்பட்டு அதற்கு பதிலாக அபிவிருத்தி சபைகள் நிறுவப்பட்டுள்ளன. இரத்தினபுரி மாவட்ட அபிவிருத்தி சபையின் உப அலுவலகம் மொரஹெல பிரதேசத்தில் அமைந்திருந்ததுடன் திரு. இரத்மலவின்னே ஆரிய சுமித்ரா செல்லஹேவா முதலாவது தலைவராக தெரிவு செய்யப்பட்டார்.

1987 ஆம் ஆண்டு 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் கீழ் இம்புல்பே பிரதேச சபை நிறுவப்பட்டதன் பின்னர் 1988 ஆம் ஆண்டு முதல் இன்று வரை பல்வேறு காலகட்டங்களில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தெரிவு செய்யப்பட்ட தவிசாளர்கள், உபதவிசாளர்கள் மற்றும் உறுப்பினர்கள் சபை மூலம் அல்லது செயலாளர் மற்றும் அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகள் அமுலாக்கும் அதிகாரி மூலம் நிர்வகிக்கப்பட்டுள்ளது.

- கௌரவ தவிசாளர் எச்.எச். மெத்தானந்த அவர்கள் 1988 தொடக்கம் 1989 வரை
- கௌரவ தவிசாளர் ஜே.எச்.எல் விஜேரத்ன அவர்கள் 1990.03.08 தொடக்கம் 1991.06.30 வரை
- கௌரவ தவிசாளர் ஜே.எம்.எல் விஜேரத்ன அவர்கள் 1991.07.01 தொடக்கம் 1996.12.30 வரை
- கௌரவ தவிசாளர் டப்.பி.எம் வீரசேகர பண்டார அவர்கள் 1997.04.25 தொடக்கம் 2002 வரை
- கௌரவ தவிசாளர் ஈ.ஏ வஜிர திசாநாயக்க அவர்கள் 2002.04.15 தொடக்கம் 2006 வரை

- கௌரவ தவிசாளர் டீ.ஆர் இந்து குணதிலக அவர்கள் 2006.04.15 தொடக்கம் 2011.01.06 வரை
- கௌரவ தவிசாளர் டீ.ஆர் இந்து குணதிலக அவர்கள் 2011.01.06 தொடக்கம் 2015.05.14 வரை

- செயலாளர் மற்றும் அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகள் அமுலாக்கும் அதிகாரி திருமதி டீ.எஸ் வதுகாரவத்த 2015.05.14 தொடக்கம் 2017.08.22 வரை
- செயலாளர் மற்றும் அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகள் அமுலாக்கும் அதிகாரி திரு டீ.ஜீ.ஜே.கே ஜயவர்தன 2017.08.23 தொடக்கம் 2017.11.28 வரை
- செயலாளர் மற்றும் அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகள் அமுலாக்கும் அதிகாரி திருமதி டீ.எஸ் வதுகாரவத்த 2017.11.29 தொடக்கம் 2018.03.19 வரை
- கௌரவ தவிசாளர் எஸ்.ஜி.வி.ஏ. ஸ்ரீ லால் செனரத் 2018.03.20 தொடக்கம் 2023.03.19 வரை
- செயலாளர் மற்றும் அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகள் அமுலாக்கும் அதிகாரி திருமதி டீ.ஏ.சி. ரோஹினி தசநாயக 2023.03.20 தொடக்கம் 2024.02.15 வரை
- செயலாளர் மற்றும் அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகள் அமுலாக்கும் அதிகாரி திருமதி ஜே.ஜீ.எஸ். விக்ரமசிங்க 2024.02.16 தொடக்கம் 2025.06.01 வரை
- கௌரவ தவிசாளர் ஏ.எம்.சுகத் அமரசிரி பண்டார அவர்கள் 2025.06.02 தொடக்கம் தற்போது வரை

# பொதுத் தகவல்கள்

மாகாணம் - சப்ரகமுவ

மாவட்டம் - இரத்தினபுரி

பிரதேச செயலாளர் பிரிவு - இம்புல்பே

தேர்தல் பிரிவு – பலாங்கொடை

33,287
ஆண்கள்

34,352
பெண்கள்

50,316
பதிவுச்செய்யப்பட்ட வாக்காளர்கள்

67,639
சனத்தொகை

256km²
பரப்பளவு



50
கிராம உத்தியோகத்தர் பிரிவுகள்

13
வாக்காளர் பிரிவு

256
கிராமங்கள்

09
நீர் திட்டங்கள்
(பிரதேச சபையிகால் நிர்வகிக்கப்படுகின்ற)

133
பொதுமயான

02
நூலகம்
(பிரதேச சபையிகால் நிர்வகிக்கப்படுகின்ற)

01
முன்பள்ளி பாடசாலை
(பிரதேச சபையிகால் நிர்வகிக்கப்படுகின்ற))

01
மைதானம்
பிரதேச சபையிகால் நிர்வகிக்கப்படுகின்ற))

01
ஆயர்வேத நிலையம்
(பிரதேச சபையிகால் நிர்வகிக்கப்படுகின்ற)

# அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் (2025.09.30 திகதி)

| தொ. இல | பதவி | அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கை | | தற்போதைய எண்ணிக்கை | | வெற்றிடங்கள் | மேலதிகம் |
|---|---|---|---|---|---|---|---|
| | | நிலையைானது | ஒப்பந்தம் | நிலையானது | ஒப்பந்தம் | | |
| 1. | செயலாளர் முகாமைத்துவ சேவை உதவியாளர் அதிஉயர் தரம் | 1 | | 1 | | | |
| 2. | ஆயர்வேத வைத்திய அதிகாரி | 1 | | 0 | | 1 | |
| 3. | அபிவிருத்தி உத்தியோகத்தர் | 19 | | 21 | | | 2 |
| 4. | தொழில்நுட்ப சேவை உத்தியோகத்தர் | 2 | | 1 | | 1 | |
| 5. | உதவி தொழில்நுட்ப சேவை உதவியாளர் | 1 | | 0 | | 1 | |
| 6. | நூலகர் | 2 | | 1 | | 1 | |
| 7. | முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் | 8 | | 8 | | | |
| 8. | வருமான பரிசீலகர் அதிகாரி | 2 | | 1 | | 1 | |
| 9. | கனரக இயந்திர செயற்பாட்டாளர் | 1 | | 1 | | | |
| 10. | சாரதி | 5 | | 6 | 1 | | 1 |
| 11. | மின் தொழில்நுட்பவியலாளர் | 2 | | 2 | | | |
| 12. | மருந்தகர் | 1 | | 1 | | | |
| 13. | அலுவலக உதவியாளர | 2 | | 1 | | 1 | |
| 14. | காவலர் | 2 | | 2 | | | |
| 15. | நூலக உதவியாளர் | 3 | | 3 | | | |
| 16. | களப்பணியாளர் | 11 | 3 | 9 | 3 | 2 | |
| 17. | சுத்திகரிப்பாளர்கள் | 7 | 2 | 7 | 2 | | |
| **மொத்தம்** | | **70** | **5** | **65** | **6** | **8** | **3** |

# நிறுவனக் கட்டமைப்பு



# 2026 வேலைத்திட்ட பாதீட்டை அங்கீகரித்தல்

1987 ஆம் ஆண்டு 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 9.3 பிரிவுடன் இணைத்து வாசிக்க வேண்டிய இச்சட்டத்தின் 168(1) வது பிரிவு மற்றும் 1988 பிரதேச சபை நிதி மற்றும் நிர்வாக சட்டதிட்டங்களின் 11 மற்றும் 12 ஏற்பாடுகளுக்கமைய தயாரிக்கப்பட்ட 2026 ஆம் வருடத்திற்கான பாதீட்டறிக்கை 2025 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 11 திகதி இம்புல்பே பிரதேச சபையின் VIII சபை கூட்டத தொடரில் 06 கூட்டத்தின் போது தீர்மான இலக்க 06 (V) கீழ் அங்கீகரிக்கப்பட்டது என சான்றுப்படுத்துகின்றேன்.

ஏ.எம்.எஸ்.ஏ. பண்டார
தவிசாளர்
இம்புல்பே பிரதேச சபை

2025 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 11 திகதி
இம்புல்பே பிரதேச சபை



# 2026 வருடத்தின் மீண்டெழும் வரவுகளின் சாரம்சம்

| கணக்கு குறியீடு | வரவு விடய விபரம் | பொது நிர்வாகம் | சுகாதார சேவை | பௌதீக திட்டமிடல், வீதி மற்றும் கட்டிடம் | நீர் சேவை | பொதுமக்கள் பயன்பாட்டு சேவை | சுகாதார சேவை | மொத்தம் | சதவீதம் (%) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 10 | வரிப்பண வரி | 814,708.32 | 475,000.00 | - | - | 1,000.00 | 50,000.00 | **1,340,708.32** | 1.09 |
| 20 | கூலி | - | - | 1,900,000.00 | 140,000.00 | 8,491,560.00 | - | **10,531,560.00** | 8.58 |
| 30 | அனுமதிப்பத்திர கட்டணம் | 401,000.00 | 1,100,000.00 | - | - | - | - | **1,501,000.00** | 1.22 |
| 40 | சேவைக்கட்டணம் | 75,000.00 | 2,101,000.00 | 3,478,500.00 | 8,825,000.00 | 5,000.00 | 16,000.00 | **14,500,500.00** | 11.81 |
| 50 | பிடியாணை கட்டணம் | 3,501,000.00 | - | 1,000.00 | 101,000.00 | 84,156.00 | 17,000.00 | **3,704,156.00** | 3.02 |
| 60 | வேறு வருமானம் | 40,726,012.84 | 366,250.00 | 400,000.00 | 3,000.00 | 100,000.00 | 56,500.00 | **41,651,762.84** | 33.92 |
| 70 | நன்கொடை வருமானம் | 22,768,208.26 | 8,880,889.05 | 11,882,026.11 | 2,365,158.85 | 1,000,645.16 | 2,678,570.85 | **49,575,498.28** | 40.37 |
| **மொத்தம்** | | **68,285,929.42** | **12,923,139.05** | **17,661,526.11** | **11,434,158.85** | **9,682,361.16** | **2,818,070.85** | **122,805,185.44** | 100 |
| **சதவீதம்** | | 55.61 | 10.52 | 14.38 | 9.31 | 7.88 | 2.29 | 100 | |

# 2026 வருடத்தின் மீண்டெழும் செலவுகளின் சாரம்சம்

| கணக்கு குறியீடு | வரவு விடய விபரம் | பொது நிர்வாகம் | சுகாதார சேவை | பௌதீக திட்டமிடல், வீதி மற்றும் கட்டிடம் | நீர் சேவை | பொதுமக்கள் பயன்பாட்டு சேவை | நலன்புரிச் சேவை | மொத்தம் | சதவீதம் (%) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | சம்பளம் | 34,195,143.04 | 13,817,564.48 | 18,092,547.04 | 3,741,495.68 | 1,658,005.44 | 4,346,536.16 | **75,851,291.84** | 65.00 |
| 02 | பயணக் கொடுப்பனவு | 1,101,000.00 | 350,000.00 | 200,000.00 | 10,000.00 | 20,000.00 | 50,000.00 | **1,731,000.00** | 1.48 |
| 03 | பொருட்கள் மற்றும் உபகரணம் | 3,985,000.00 | 3,570,000.00 | 3,020,000.00 | 135,000.00 | 300,000.00 | 1,130,000.00 | **12,140,000.00** | 10.40 |
| 04 | மூலதன சொத்து பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்பு | 2,570,000.00 | 1,630,000.00 | 4,272,000.00 | 2,050,000.00 | 750,000.00 | 230,000.00 | **11,502,000.00** | 9.86 |
| 05 | போக்குவரத்து தொடர்பு மற்றும் அத்தியாவசிய சேவை | 2,426,000.00 | 1,225,000.00 | 400,000.00 | 3,800,000.00 | 530,000.00 | 340,000.00 | **8,721,000.00** | 7.47 |
| 06 | வட்டி மற்றும் இலாபம் | 82,800.00 | - | 2,000.00 | 1,000.00 | - | - | **85,800.00** | 0.07 |
| 07 | நன்கொடை, பங்களிப்பு மற்றும் உதவிகள் | 301,000.00 | 170,500.00 | 90,000.00 | - | 408,000.00 | 1,376,000.00 | **2,345,500.00** | 2.01 |
| 08 | ஓய்வூதியம் மற்றும் பணிக்கொடை | 1,740,331.20 | 932,345.76 | 1,136,779.32 | 207,210.24 | 82,448.64 | 226,342.08 | **4,325,457.24** | 3.71 |
| **மொத்தம்** | | **46,401,274.24** | **21,695,410.24** | **27,213,326.36** | **9,944,705.92** | **3,748,454.08** | **7,698,878.24** | **116,702,049.08** | 100 |
| **மொத்தம்** | | 39.76 | 18.59 | 23.32 | 8.52 | 3.21 | 6.60 | 100 | |

# 2026 வருடத்தின் மீண்டெழும் மூலதன பெறுவனவு மற்றும் கொடுப்பனவு சாரம்சம்

| வரவு விடயம் | பொது நிர்வாகம் | சுகாதார சேவை | பௌதீக திட்டமிடல், வீதி மற்றும் கட்டிடம் | நீர் சேவை | பொதுமக்கள் பயன்பாட்டு சேவை | நலன்புரிச் சேவை | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| மீண்டெழும் வருமானம் | 68,285,929.42 | 12,923,139.05 | 17,661,526.11 | 11,434,158.85 | 9,682,361.16 | 2,818,070.85 | **122,805,185.44** |
| மூலதன வருமானம் | - | 39,440,000.00 | 12,500,000.00 | 10,000,000.00 | 4,500,000.00 | 1,500,000.00 | **67,940,000.00** |
| **மொத்தம்** | **68,285,929.42** | **52,363,139.05** | **30,161,526.11** | **21,434,158.85** | **14,182,361.16** | **4,318,070.85** | **190,745,185.44** |
| மீண்டெழும் செலவு | 46,401,274.24 | 21,695,410.24 | 27,213,326.36 | 9,944,705.92 | 3,748,454.08 | 7,698,878.24 | **116,702,049.08** |
| மூலதன செலவு | 1,000,000.00 | 39,490,000.00 | 14,802,000.00 | 11,751,000.00 | 4,500,000.00 | 2,500,000.00 | **74,043,000.00** |
| **மொத்தம்** | **47,401,274.24** | **61,185,410.24** | **42,015,326.36** | **21,695,705.92** | **8,248,454.08** | **10,198,878.24** | **190,745,049.08** |
| **மேலதிகம்/பற்றாக்குறை** | **20,884,655.18** | **(8,822,271.19)** | **(11,853,800.25)** | **(261,547.07)** | **5,933,907.08** | **(5,880,807.39)** | **136.36** |



# வரவு
# சுருக்கமும்
# மதிப்பீடும்
# 2026

# வேலைத்திட்டம் இல 01 – பொது நிர்வாகம்

பொது நிர்வாகம் முதலாவது வகைப்படுத்தலாவதோடு நிறுவனத்தின் பொது நிர்வாக நடவடிக்கைகள், ஊழியர்களின் செயற்பாடுகள், நிதி நடவடிக்கைகள், நிறுவனத்தின் செயற்திறன் மற்றும் விளைத்திறன் தொடர்பான செயற்பாடுகள் மற்றும் பயிற்சி நடவடிக்கைகள் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன. பொது நிர்வாகத்தின் கீழ் வரிப்பணம் முக்கிய வருவாய் ஆதாரமாக காணப்டுகின்றது.

- **வரிப்பண வரி** (1.11)

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவு 134 (1) இன் படி, உள்ளூர் அரசாங்க நிறுவனங்கள் தங்கள் எல்லைக்குள் அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட செயற்பாடுகளின் செலவுகளைச் ஈடுசெய்வதற்காக பயன்படுத்தும் முக்கிய வருவாய் வரிப்பணமாகும். வரிப்பண எல்லையில் குப்பைகளை அகற்றுதல், சாலைகள் மற்றும் வடிகால் அமைப்புகளை மேம்படுத்துதல், பராமரிப்பு, தெருவிளக்குகள் பராமரிப்பு, குடிநீர் வசதிகளை வழங்குதல் உள்ளிட்ட சமூக மேம்பாடு மற்றும் இதனோடு தொடர்புடைய விடயங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. உள்ளூராட்சி சபைக்குரிய கலகம மற்றும் பின்னவல ஆகிய 2 வரிப்பண வலயங்களில் 641 வரிப்பண அலகுகள் அமைந்துள்ளன. மேலும் ஒவ்வொரு வருடத்தின் தொடக்கத்திலும் சொத்து தொடர்பான மதிப்பீட்டு அறிவிப்பு வெளியிடப்படுகிறது. வருடாந்தம் சொத்துகள் தொடர்பில் மதிப்பீட்டு அறிவித்தல் வழங்கப்படுவதுடன் 05 வருடங்களுக்கு ஒருமுறை மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் வரிப்பண வலயங்களுக்குள் உள்ள ஒவ்வொரு சொத்தின் பெறுமதியையும் மதிப்பீடு செய்வதோடு வீடு மற்றும் வியாபார நிலையங்களுக்கு அந்த மதிப்பீட்டில் 4% வரிப்பணமாக அறவிடப்படுகின்றது. 2026 ஆம் ஆண்டிற்கான வரிப்பண கட்டணமாக ரூ.538,208.32 பெறப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

- **ஏக்கர் வரி (1.12)**

  1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க உள்ளூராட்சி மன்றச் சட்டத்தின் 134 வது பிரிவின் பிரிவு (3) இன் படி ஏக்கர் வரி விதிக்கப்படுகிறது. உள்ளூராட்சி சபைக்கு சொந்தமான ஏக்கர் வரி அலகுகளின் எண்ணிக்கை 68 மற்றும் ஒவ்வொரு வருடத்தின் தொடக்கத்திலும் சொத்து தொடர்பான மதிப்பீட்டு அறிவிப்புகள் வெளியிடப்படுகின்றன. உள்ளூராட்சி சபையின் அதிகார எல்லைக்குள் இருக்கும் காணி அளவீடுகள் நடத்தப்பட்டு, 01 முதல் 05 ஹெக்டெயார் வரையான காணிக்கு வருடாந்தம் 50 ரூபாவும் மேலதிகமாக ஒவ்வொரு ஹெக்டெயாருக்கும் 10 ரூபாவும் அறவிடப்படும். 2026 ஆம் ஆண்டிற்கான ஏக்கர் வரியாக ரூ.21,000.00 பெறப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

- **நிலங்களை துண்டிடுவதற்கான வரி(1.18)**

அதிகார எல்லையில் உள்ள நிலங்களை துண்டிட்டு விற்பனை செய்யும் போது விதிக்கப்படும் வரியாக 2026 ஆம் ஆண்டில் ரூபா 250,000.00 மதிப்பிடப்பட்டுள்ளது.

- **விளம்பரக் கட்டணம் (1.37)**

இப்பகுதியில் விளம்பரப் பலகைகளின் அளவுக்கேற்ப கட்டணம் அறவிடப்படும். 2026 ஆம் ஆண்டில் ரூ. 400,000.00 ஈட்டப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இது தவிர நீதிமன்ற அபராதம், முத்திரை வரி மற்றும் வருவாய் உதவி போன்ற வருவாய்கள் மூலம் 2026 ஆம் ஆண்டில் ரூ. 68,285,929.42 எதிர்பார்க்கப்படுகிறது.

| தலைப்பு | வருமான மூலங்கள் | 2023 உண்மை வருமானம் | 2024 உண்மை வருமானம் | 2025.06.30 உண்மை வருமானம் | 2026 மதிப்பீடு |
|---|---|---|---|---|---|
| **10 வரிப்பணம்** | | | | | |
| 1.11 | வரிப்பணம் | 259,183.81 | 508,475.85 | 380,659.10 | 538,208.32 |
| 1.11(1) | வரிப்பண புத்தகத்தில் பெயர்மாற்றத்திற்கான கட்டணம் | - | - | - | 4,500.00 |
| 1.11(2) | வரிப்பண புத்தகத்தின் பிரதியொன்றை பெறுவதற்கு | - | - | - | 1,000.00 |
| 1.12 | ஏக்கர் வரி | 67,438.89 | 23,403.12 | 17,457.00 | 21,000.00 |
| 1.18 | நிலங்களை துண்டிடுவதற்கான வரி | 100,360.00 | - | - | 250,000.00 |
| | மொத்தம் | **426,982.70** | **531,878.97** | **398,116.10** | **814,708.32** |
| **30 அனுமதி பத்திர கட்டணம்** | | | | | |
| 1.35 | வாகனம் மற்றும் விலங்குகள் வரி (யானைகள், சைக்கிள்) | - | - | - | 1,000.00 |
| 1.37 | வேறு (விளம்பர பலகை கட்டணம்) | 331,481.25 | 275,563.25 | 61,768.50 | 400,000.00 |
| | **மொத்தம்** | **331,481.25** | **275,563.25** | **61,768.50** | **401,000.00** |
| **40 சேவைக்கட்டணம்** | | | | | |
| 1.41 | பதிவுச்செய்தல் சான்றிதழ் மற்றும் பரிசீலனை கட்டணம் (வழங்குனர்களை பதிவுச் செய்தல்) | 72,000.00 | 55,750.00 | 3,000.00 | 75,000.00 |
| | **மொத்தம்** | **72,000.00** | **55,750.00** | **3,000.00** | **75,000.00** |
| **50 பிடியாணை கட்டணம்** | | | | | |
| 1.51 | பிடியாணை கட்டணம் | - | - | - | 1,000.00 |
| 1.52 | தண்டப்பணம் (நீதிமன்ற கிடைப்பனவு) | 2,802,503.00 | 2,878,312.00 | 3,762,662.00 | 3,500,000.00 |
| | **மொத்தம்** | **2,802,503.00** | **2,878,312.00** | **3,762,662.00** | **3,501,000.00** |
| **60 வேறு வருமானங்கள்** | | | | | |
| 1.61 (1) | வட்டி (முதலீட்டு வட்டி) | 645,842.88 | 1,048,730.24 | 585,391.23 | 1,243,212.84 |
| 1.61 (2) | வட்டி (சொத்து கடன் வட்டி) | 68,213.88 | 118,071.81 | 63,237.65 | 82,800.00 |
| 1.62 (1) | விற்பனை (அச்சிடப்பட்ட படிவங்கள் , பழைய பொருட்கள்) | 251,922.00 | 69,832.20 | 40,258.00 | 150,000.00 |
| 1.62 (2) | வேறு கிடைப்பனவு (மானியங்கள்) | 2,338,723.88 | 539,632.06 | 490,823.28 | 8,850,000.00 |
| 1.64 | செயற்பாட்டு வருமானங்கள் (ஊழியர் கடன் வட்டி) | 337,870.41 | 399,898.50 | 211,622.31 | 400,000.00 |
| 1.65 | முத்திரை கட்டணம் | 21,013,274.00 | 17,275,282.00 | 165,500.00 | 30,000,000.00 |
| | **மொத்தம்** | **24,655,847.05** | **19,451,446.81** | **1,556,832.47** | **40,726,012.84** |
| **70 வருமான ஆதாரங்கள்** | | | | | |
| 1.71 (1) | பணியாளர் சம்பளம் திருப்பிச் செலுத்துதல் | 19,192,345.47 | 19,797,530.86 | 11,895,816.88 | 19,582,208.26 |
| 1.71 (2) | உறுப்பினர் கொடுப்பனவு திருப்பிச் செலுத்துதல் | 1,397,700.00 | - | - | 3,042,000.00 |
| 1.71 (3) | பட்டபயிற்சி திருப்பிச் செலுத்துதல் | - | - | - | 144,000.00 |
| | **மொத்தம்** | **20,590,045.47** | **19,797,530.86** | **11,895,816.88** | **22,768,208.26** |
| | **மொத்த தொகை** | **48,878,859.47** | **42,990,481.89** | **17,678,195.95** | **68,285,929.42** |

# வேலைத் திட்ட இல 02 – சுகாதார சேவை

சுகாதார சேவை இரண்டாவது வகைப்படுத்தலாவதோடு பிரதேசத்தில் முறையான சுகாதாரமிக்க சூழலை உருவாக்குதல் மற்றும் நடாத்திச் செல்ல முறையான கழிவு முகாமைத்துவத்தை மேற்கொள்ளல், மரநடுகை, ஹோட்டல் மற்றும் வியாபார நிலையங்களை நிருவகித்தல் போன்ற செயற்பாடுகளினால் உழைக்கும் வருவாயுடன் சேதன பசளை விற்பனை மூலம் உழைக்கும் வருவாய் சுகாதார சேவையின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளது.

- **வியாபார வரி (2.13)**

அதிகார எல்லையில் வரிப்பணம் நடாத்திச் செல்ல உரிமங்களைப் பெறத் தேவையில்லாத வணிகங்களிலிருந்து வசூலிக்கப்படும் வரி நிதி இதில் அடங்கும். 2026 ஆம் ஆண்டில் ரூ. 475,000.00 வருமானம் எதிர்பார்க்கப்படுகின்றது.

- **வியாபார அனுமதி கட்டணம் (2.31)**

துணைச் சட்டங்கள் மற்றும் பிற துணைச் சட்டங்களின்படி உரிமங்களை வழங்குவதன் மூலம் கிடைக்கும் வருமானம் இதில் அடங்கும். 2026 ஆம் ஆண்டில் ரூ. 700,000.00 வருமானம் எதிர்பார்க்கப்படுகின்றது.

- **விசேட கட்டணம் (2.36)**

சுற்றுலா சபையில் பதிவுசெய்யப்பட்ட ஹோட்டல்களில் இருந்து கிடைக்கும் என கணிக்கப்பட்டுள்ள கட்டணம் இதில் அடங்கும். 2026 ஆம் ஆண்டில் ரூ. 400,000.00 வருமானம் எதிர்பார்க்கப்படுகின்றது.

- **கழிவுக் கட்டணம் (2.42)**

பிரதேசத்தின் வரிப்பண வலயங்களுக்குள் உட்படாத வீடுகள் மற்றும் வணிக நிறுவனங்களில் இருந்து அகற்றப்படும் குப்பைகளை சேகரிப்பதற்காக வசூலிக்கப்படும் கட்டணம் இதில் அடங்கும். 2026 ஆம் ஆண்டில் எதிர்பார்க்கப்படும் வருவாய் ரூபா 2,000,000.00 ஆகும். பதுளை மற்றும் பின்னவல பிரதான இரு வீதிகளோடு உள்ளூர் வீதிகள் வரை எமது சேவைகள் விரிவுபடுத்தபட்டுள்ளது. தற்போது 250 குப்பைகளை அகற்றும் இடங்கள் உள்ளன.

- **உக்காத கழிவு விற்பனை (2.64)**

இப் பகுதியில் அகற்றப்படும் உக்காத கழிவுகளைச் சேகரித்து விற்பனை செய்வதன் மூலம் 2026 ஆம் ஆண்டில் எதிர்பார்க்கப்படும் வருமானம் ரூபா 300,000.00 ஆகும்.

- **சேதன பசளை விற்பனை (2.65)**

இந்தப் பகுதியில் உக்கும் கழிவுகளைச் சேகரித்து அப்புறப்படுத்துவதன் மூலம் உற்பத்தி செய்யப்படும் சேதன உர விற்பனையிலிருந்து 2026 ஆம் ஆண்டில் எதிர்பார்க்கப்படும் வருமானம் ரூபா 65,250.00 ஆகும்.

இது தவிர வருவாய் மூலங்கள் மற்றும் மூலதன கிடைப்பனவு உள்ளடக்கப்படுவதுடன் 2026 ஆம் ஆண்டில் எதிர்பார்க்கப்படும் வருமானம் ரூபா 52,363,139.05 ஆகும்.

| தலைப்பு | வருமான மூலங்கள் | 2023 உண்மை வருமானம் | 2024 உண்மை வருமானம் | 2025.06.30 உண்மை வருமானம் | 2026 மதிப்பீடு |
|---|---|---|---|---|---|
| **10 வரிப்பணம்** | | | | | |
| 2.13 | வியாபார வரி | 697,470.00 | 788,720.00 | 303,680.00 | 475,000.00 |
| **மொத்தம்** | | **697,470.00** | **788,720.00** | **303,680.00** | **475,000.00** |
| **30 அனுமதி பத்திர கட்டணம்** | | | | | |
| 2.31 | வியாபார அனுமதிப்பத்திரம் | 326,500.00 | 369,180.00 | 386,129.00 | 700,000.00 |
| 2.36 | விசேட கட்டணம் (சுற்றுலா ஹோட்டல் கட்டணம்) | 439,795.14 | 743,220.97 | 170,246.98 | 400,000.00 |
| **மொத்தம்** | | **766,295.14** | **1,112,400.97** | **556,375.98** | **1,100,000.00** |
| **40 சேவைக்கட்டணம்** | | | | | |
| 2.41 | பதிவுச்சான்றிதழ் மற்றும் பரிசீலனை கட்டணம் (சுற்றுச்சுழல் அனுமதிப்பத்திர பரிசீலனை கட்டணம்) | - | - | - | 100,000.00 |
| 2.42 | கழிவுக் கட்டணம் | 718,800.00 | 910,600.00 | 1,345,100.00 | 2,000,000.00 |
| 2.43 | அறவிடக்கூடிய கட்டணம் (மயான பூமி கட்டணம் மற்றும் நாய்களை பதிவுச்செய்தல்) | 5,000.00 | - | 8,000.00 | 1,000.00 |
| **மொத்தம்** | | **723,800.00** | **910,600.00** | **1,353,100.00** | **2,101,000.00** |
| **60 வேறு வருமானங்கள்** | | | | | |
| 2.62 | விற்பனை (வைத்திய சான்றிதழ்) | 7,900.00 | 7,500.00 | - | 1,000.00 |
| 2.64 | திண்ம கழிவு முகாமைத்துவம் (உக்காத கழிவு) | 12,035.00 | 108,570.00 | 151,145.00 | 300,000.00 |
| 2.65 | காபனிக் உர விற்பனை | 56,640.00 | 103,180.00 | 13,860.00 | 65,250.00 |
| **மொத்தம்** | | **76,575.00** | **219,250.00** | **165,005.00** | **366,250.00** |
| **70 வருமான ஆதாரங்கள்** | | | | | |
| 2.71 | ஊழியர் சம்பளம் திருப்பிச் செலுத்துதல் | 4,411,012.08 | 5,760,698.08 | 3,406,140.09 | 8,880,889.05 |
| **மொத்தம்** | | **4,411,012.08** | **5,760,698.08** | **3,406,140.09** | **8,880,889.05** |
| **80 மூலதன கிடைப்பனவு** | | | | | |
| 2.80 (1) | திண்ம கழிவு முகாமைத்துவம் (மேம்படுத்தல்) | - | - | - | 2,000,000.00 |
| 2.80 (2) | பொது மயான நிர்மாணம் | - | - | - | 37,440,000.00 |
| **மொத்தம்** | | **-** | **-** | **-** | **39,440,000.00** |
| **மொத்த தொகை** | | **6,675,152.22** | **8,791,669.05** | **5,784,301.07** | **52,363,139.05** |

# வேலைத்திட்ட இல 03 – பௌதீக திட்டமிடல், சாலைகள் மற்றும் காணி கட்டிடம்

பௌதீக திட்டமிடல், சாலைகள் மற்றும் காணி கட்டிட வருவாய் மூன்றாவது வகைப்படுத்தலாகும். இதன் கீழ் பிரதேச சபை எல்லையின் காணி மற்றும் கட்டிடம் தொடர்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

- **இயந்திரங்களை வாடகைக்கு வழங்கல் (3.24(1)/3.24(2))**

சபையின் பெக்கோ பாரம் ஏற்றல் போன்ற இயந்திரங்களை வாடகைக்கு வழங்கி அதன் மூலம் பெறப்பட்ட வருமானம் இதில் சேர்க்கப்பட்டுள்ளது. 2026 ஆம் ஆண்டில் ரூபா 1,900,000.00 வருமானம் எதிர்பார்க்கப்படுகின்றது.

- **சேவைக்கான கட்டணம் (3/43 - 3/44)**

இதன் கீழ் முக்கியமாக உடைமைச் சான்றிதழை வழங்குதல் மற்றும் கட்டிடத் வரையறை சான்றிதழ் வழங்கல், ஹியூம் குழாய்களை விற்பனை செய்தல், கட்டிடத் திட்டங்கள் மற்றும் இணக்கச் சான்றிதழ்களை வழங்குதல் மற்றும் காணி துண்டிடல் திட்டங்களுக்கு ஒப்புதல் அளித்தல் மூலம் 2026 ஆம் ஆண்டில் ரூபா 3,478,500.00 வருமானம் மதிப்பிடப்பட்டுள்ளது.

- **சூரிய வலுசக்தி கிடைப்பனவு (3.63)**

கலகம பல்நோக்கு கட்டிடத்தில் பொருத்தப்பட்டுள்ள சூரிய வலுசக்தி மூலம் 2026ஆம் ஆண்டில் ரூபா 300,000.00 வருமானம் மதிப்பிடப்பட்டுள்ளது.

இது தவிர பிடியாணை கட்டணம், அபராதம், வேறு வருமானங்கள், வருவாய் மூலங்கள் மற்றும் மூலதன கிடைப்பனவு உள்ளடக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் 2026 ஆம் ஆண்டில் ரூபா 30,161,526.11 மதிப்பிடப்பட்டுள்ளது.

| தலைப்பு | வருமான மூலங்கள் | 2023 உண்மை வருமானம் | 2024 உண்மை வருமானம் | 2025.06.30 உண்மை வருமானம் | 2026 மதிப்பீடு |
|---|---|---|---|---|---|
| **20 கூலி** | | | | | |
| 3.24 (1) | இயந்திரம் வாடகைக்கு வழங்கல் (ஜே.சி.பி) | 2,788,780.00 | 2,616,757.17 | 465,000.00 | 1,800,000.00 |
| 3.24 (2) | இயந்திரம் வாடகைக்கு வழங்கல் (வேறு) | | | 45,500.00 | 100,000.00 |
| **மொத்தம்** | | **2,788,780.00** | **2,616,757.17** | **510,500.00** | **1,900,000.00** |
| **40 வேறு சேவைகள்** | | | | | |
| 3.43 (1) | உடைமைச் சான்றிதழை வழங்குதல் மற்றும் கட்டிடத் வரையறை சான்றிதழ் வழங்கல | 136,250.00 | 219,400.00 | 117,150.00 | 175,000.00 |
| 3.43 (2) | ஒப்பந்ததாரர்களின் பதிவு | - | - | - | 2,500.00 |
| 3.44 (1) | கட்டிடத் திட்டங்கள் மற்றும் இணக்கச் சான்றிதழ் கட்டணம் / தொலைத்தொடர்பு கோபுர நிர்மாணிப்பு | 225,270.00 | 577,500.00 | 87,575.00 | 225,000.00 |
| 3.44 (2) | காணி துண்டிடல் திட்டங்களுக்கு ஒப்புதல் அளித்தல் | 26,500.00 | 57,000.00 | 56,030.00 | 75,000.00 |
| 3.44 (3) | ஹியூம் குழாய்களை விற்பனை | - | 21,430.00 | - | 1,000.00 |
| 3.44 (4) | பாதை பராமரிப்பு | - | - | - | 3,000,000.00 |
| **மொத்தம்** | | **388,020.00** | **875,330.00** | **260,755.00** | **3,478,500.00** |
| **50 பிடியாணை மற்றும் தண்டப்பணம்** | | | | | |
| 3.51 | பிடியாணை கட்டணம் (கைத்தொழில் தண்டப்பணம் | - | - | - | 1,000.00 |
| **மொத்தம்** | | **-** | **-** | **-** | **1,000.00** |
| **60 வேறு வருமானங்கள்** | | | | | |
| 3.62 | படிவங்கள் கட்டணம் மற்றும் வேறு கிடைப்பனவு (அபாயகரமான மரங்கள் மற்றும் கட்டிட திட்ட விண்ணப்பபடிவம்) | 31,720.00 | 56,965.00 | 43,540.00 | 100,000.00 |
| 3.63 | சூரிய மின்சக்தி கிடைப்பனவு (கலகம பல்நோக்கு கட்டிடம்) | 507,548.54 | 366,148.63 | 159,579.00 | 300,000.00 |
| **மொத்தம்** | | **539,268.54** | **423,113.63** | **203,119.00** | **400,000.00** |
| **70வருமான ஆதாரங்கள்** | | | | | |
| 3.71 | ஊழியர் சம்பளம் திருப்பிச் செலுத்துதல் | 10,287,190.18 | 10,400,295.98 | 6,415,875.17 | 11,882,026.11 |
| **மொத்தம்** | | **10,287,190.18** | **10,400,295.98** | **6,415,875.17** | **11,882,026.11** |
| **80 மூலதன கிடைப்பனவு** | | | | | |
| 3.81 | கைத்தொழில் கிடைப்பனவு | 24,775.06 | 397,039.50 | - | 10,000,000.00 |
| 3.82 | பின்னவல சிறுநகர நிர்மாணிப்பிற்கான காணி கையகப்படுத்தல் நிதி ஒதுக்கீடு | - | - | - | 2,500,000.00 |
| **மொத்தம்** | | **24,775.06** | **397,039.50** | **-** | **12,500,000.00** |
| **மொத்த தொகை** | | **14,028,033.78** | **14,712,536.28** | **7,390,249.17** | **30,161,526.11** |

# வேலைத்திட்ட இல 04 – நீர் சேவை

நீர் சேவை இச்சபையின் நான்காவது வேலைத்திட்டமாகும். இப்பிரதேச மக்களின் நீர்த்தேவையை பூர்த்தி செய்வதற்காக சபையின் முழுப் பகுதியையும் உள்ளடக்கியதாக 09 நீர் திட்டங்கள் உள்ளன. இந்த நீர் திட்டங்களின் மானி வாசிப்பு மூலம் கிடைக்கும் வருமானம் சபைக்கு கிடைக்கும் முக்கிய வருமானமாகும்.

- **நீர் பவுசர் வாடகைக்கு வழங்கல் (4.25)**

2026 ஆம் வருடத்தில் சபையின் நீர் பவுசரை வாடகைக்கு விடுவதன் மூலம் ரூ. 120,000.00 வருமானம் எதிர்பார்க்கப்படுகின்றது.

- **நீர் கட்டணம் (4.41)**

அலுத்நுவர சிட்னி எல்லாவல், நலுவெல, வடகொலுலந்த, பின்னவல, பம்பஹின்ன, அமுவதுகொட, கலகம, நாகெட்டியவத்த நீர்த் திட்டங்கள் மூலம் 2500 பயனாளிகளுக்கு நீர் வழங்கப்படுவதுடன் அறவிடப்படும் கட்டணம் மூலம் 2026 ஆம் ஆண்டிற்கான மதிப்பிடப்பட்ட வருமானம் ரூபா 8,500,000.00 ரூபாவாகும்.

- **புதிய நீர் இணைப்பு கட்டணம் (4.43)**

புதிய நீர் இணைப்பை வழங்குவதன் மூலம் 2026 ஆம் ஆண்டில் ரூபா 325,000.00 வருமானம் எதிர்பார்க்கப்படுகின்றது.

இது தவிர நீர் சேவை விண்ணப்பக் கட்டணம், வாரண்ட் கட்டணம், அபராதம், வருமான மூலங்கள், பங்களிப்புகள் மற்றும் மூலதன கிடைப்பனவுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2026 ஆம் ஆண்டில் ரூபா 21,434,158.85 வருவாய் எதிர்பார்க்கப்படுகின்றது.

| தலைப்பு | வருமான மூலங்கள் | 2023 உண்மை வருமானம் | 2024 உண்மை வருமானம் | 2025.06.30 உண்மை வருமானம் | 2026 மதிப்பீடு |
|---|---|---|---|---|---|
| **20 கூலி** | | | | | |
| 4.25 (1) | நீர் பவுசர் வாடகைக்கு வழங்கல | 140,000.00 | 74,000.00 | 58,500.00 | 120,000.00 |
| 4.25 (2) | நீர் பவுசர் நிறுத்தி வைத்தல் கட்டணம் | - | 8,500.00 | 2,000.00 | 15,000.00 |
| 4.25 (3) | நீர் பவுசர் 10 கி.மீற்றருக்கு அப்பால் சென்றால் மேலதிக கி.மீ அறவிடப்படும் கட்டணம் | - | - | - | 5,000.00 |
| **மொத்தம்** | | **140,000.00** | **82,500.00** | **60,500.00** | **140,000.00** |
| **40 சேவைக்கட்டணம்** | | | | | |
| 4.41 | குடிநீர் வழங்கல் கட்டணம் | 9,520,820.00 | 10,377,602.50 | 5,000,436.00 | 8,500,000.00 |
| 4.43 | அறவிடக்கூடிய கட்டணம் (புதிய நீர் சேவை வழங்கல் கட்டணம்) | 470,000.00 | 452,990.00 | 455,100.00 | 325,000.00 |
| **மொத்தம்** | | **9,990,820.00** | **10,830,592.50** | **5,455,536.00** | **8,825,000.00** |
| **50 பிடியாணை மற்றும் தண்டப்பணம்** | | | | | |
| 4.51 | பிடியாணை (துண்டிக்கப்பட்ட நீர் சேவையை மீளப்பெறல் கட்டணம்) | 54,000.00 | 54,000.00 | 30,000.00 | 66,000.00 |
| 4.52 | அனுமதியின்றி நீர் பெறலுக்கான தண்டப்பணம் | - | - | 10,000.00 | 35,000.00 |
| **மொத்தம்** | | **54,000.00** | **54,000.00** | **40,000.00** | **101,000.00** |
| **60 வேறு வருமானங்கள்** | | | | | |
| 4.62 | விற்பனை (நீர் சேவை விண்ணப்படிவம் மற்றும் வேறு) | 1,125.00 | 4,825.00 | 5,900.00 | 3,000.00 |
| **மொத்தம்** | | **1,125.00** | **4,825.00** | **5,900.00** | **3,000.00** |
| **70 வருமான ஆதராங்கள் மற்றும் பங்களிப்புகள்** | | | | | |
| 4.71 | ஊழியர் சம்பளம் திருப்பிச் செலுத்துதல் | 1,550,202.27 | 2,452,864.81 | 1,563,717.81 | 2,365,158.85 |
| **மொத்தம்** | | **1,550,202.27** | **2,452,864.81** | **1,563,717.81** | **2,365,158.85** |
| **80 மூலதன கிடைப்பனவு** | | | | | |
| 4.81 (1) | நீர் திட்ட நவீனமயமாக்கல் கடன் பெறல் (பின்னவல, கலகம, நுவர) | - | - | - | 5,000,000.00 |
| 4.81 (2) | நீர் சுத்திகரிப்பு அலகொன்றை நிர்மாணித்தல் | - | - | - | 5,000,000.00 |
| **மொத்தம்** | | **-** | **-** | **-** | **10,000,000.00** |
| **மொத்த தொகை** | | **11,736,147.27** | **13,424,782.31** | **7,125,653.81** | **21,434,158.85** |

# வேலைத்திட்ட 05 – பொது மக்கள் பயன்பாட்டு சேவை

பொது மக்கள் பயன்பாட்டு சேவை ஐந்தாவது வேலைத்திட்டமாவதுடன் இந்த திட்டத்தின் கீழ் சபைக்குரிய சொத்துகளை வாடகைக்கு விடுவதன் மூலம் பெறப்படும் கூலி, காசு, சுற்றுலா தலங்களின் அனுமதிச்சீட்டு விற்பனை மூலம் பெறப்படும் வருமானம், சந்தையை குத்தகைக்கு வழங்குதல் என்பன மீது முக்கிய கவனம் செலுத்தப்படுகிறது.

- **வியாபார நிலையங்களை வாடகைக்கு வழங்கல் (5.22)**

இம்புல்பே பிரதேச சபைக்கு சொந்தமான பின்னவல சந்தை இடத்தில் அமைந்துள்ள 05 கடைகளை வாடகைக்கு விடுவதன் மூலம் பெறக்கூடிய வருமானம் இதில் அடங்கும். மூன்று வருடங்களுக்கு ஒரு முறை வாடகை மதிப்பீடு செய்யப்பட்டு தீர்மானிக்கப்படுவதோடு 2026 ஆம் ஆண்டில் எதிர்பார்க்கப்படும் வருமானம் ரூபா 75,000.00 ஆகும்.

- **வாரசந்தை வரி (5.23)**

பின்னவல மற்றும் பம்பஹின்ன பகுதிகளில் இரண்டு பொது சந்தைகள் காணப்பட்டதுடன் அவற்றில் பின்னவல சந்தை தற்போது செயற்பாட்டு நிலையில் இல்லை. இச்சந்தையை மீண்டும் நடத்த எதிர்பார்க்கப்படுகிறது. கடந்த சில ஆண்டுகளாக இதை செயற்பாட்டு நிலைக்கு கொண்டு வரமுடியவில்லை. 2026 ஆம் ஆண்டுக்கான உத்தேச வருமானமாகக் ரூபா 100,000.00 கருதப்படுகின்றது.

- **கட்டிட வரி வாடகை (5.24(1)/5.24(2)/5.24(3))**

கட்டிட வரி வாடகையின் கீழ் கலகம சுற்றுலா மையம், கலகம பல்நோக்கு கட்டிடம் மற்றும் தியபஹாச ரிசார்ட் ஆகியவற்றை குத்தகைக்கு வழங்குவதன் மூலம் வருமானத்தை ஈட்ட எதிர்பார்க்கப்படுவதுடன் 2026 ஆம் ஆண்டில் ரூபா 4,116,560.00 வருமானம் மதிப்பிடப்பட்டுள்ளது.

- **அனுமதிச்சீட்டு விற்பனை (5.24(4)/5.24(5)/5.24(6))**

பஹன்துடாவ நீர்வீழ்ச்சி, சுரதலி நீர்வீழ்ச்சி ஆகியவற்றை பார்வையிடுவதற்கான அனுமதிச்சீட்டு விற்பனை மற்றும் சமனல வாவி கயாக் படகு அனுமதிச்சீட்டு விற்பனை மூலம் 2026 ஆம் ஆண்டில் எதிர்பார்க்கப்படும் வருமானம் 4,200,000.00 ஆகும்.

- **பிடியாணை கட்டணம் (5.51)**

குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள சொத்துகளுக்கு மாதாந்த வாடகை குறித்த திகதிகளில் செலுத்தப்படாத சந்தர்ப்பங்களில் வசூலிக்கப்படும் அபராதம் இதில் உள்ளடங்குவதுடன் 2026 ஆம் ஆண்டில் எதிர்பார்க்கப்படும் வருமானம் ரூபா 84,156.00 ஆகும்.

இது தவிர வேறு வருமானங்கள், வருவாய் மூலங்கள் மற்றும் மூலதன கிடைப்பனவு உள்ளடக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் 2026 ஆம் ஆண்டில் ரூபா 14,182,361.16 மதிப்பிடப்பட்டுள்ளது.

| தலைப்பு | வருமான மூலங்கள் | 2023 உண்மை வருமானம் | 2024 உண்மை வருமானம் | 2025.06.30 உண்மை வருமானம் | 2026 மதிப்பீடு |
|---|---|---|---|---|---|
| | | **10 வரிப்பணம் மற்றும் வரி** | | | |
| 5.13 | சபைக்குரிய இடங்கள் மற்றும் மண்டத்தை கூட்டங்களுக்காக வழங்கல் | - | - | - | 1,000.00 |
| | **மொத்தம்** | **-** | **-** | **-** | **1,000.00** |
| | | **20 கூலி** | | | |
| 5.22 (1) | விற்பனை உரிமையை கூலிக்கு வழங்கல் (பின்னவல கடைதொகுதி) | 45,000.00 | 57,500.00 | 35,000.00 | 75,000.00 |
| 5.22 (2) | பின்னவல கடைதொகுதி வருடாந்த கூலி | 245,000.00 | - | - | - |
| 5.23 | விற்பனை உரிமையை கூலிக்கு வழங்கல் (சந்தை கூலி) | 59,260.00 | 60,170.00 | 27,760.00 | 100,000.00 |
| 5.24 (1) | கலகம சுற்றுலா நிலையத்தை கூலிக்கு வழங்கல் | 320,000.00 | 419,100.00 | 80,000.00 | 826,560.00 |
| 5.24 (2) | தியபஹாச ரிசார்ட் கூலிக்கு வழங்கல் | 256,400.00 | 400,580.00 | 196,400.00 | 650,000.00 |
| 5.24 (3) | கலகம பல்நோக்கு கட்டிடத்தை கூலிக்கு வழங்கல் | - | 80,000.00 | - | 2,640,000.00 |
| 5.24 (4) | பஹன்துடாவ நுழைவுச்சீட்டு வழங்கல் | 690,200.00 | 789,100.00 | 382,400.00 | 800,000.00 |
| 5.24 (5) | சமனல வாவி கயாக் நடவடிக்கையை மேற்கொள்ளும் போது நுழைவுச்சீட்டு வழங்கல் | - | - | - | 2,000,000.00 |
| 5.24 (6) | சுரதலி நீர்வீழ்ச்சி நுழைவுச்சீட்டு வழங்கல் | - | - | - | 1,400,000.00 |
| | **மொத்தம்** | **1,615,860.00** | **1,806,450.00** | **721,560.00** | **8,491,560.00** |
| | | **40 சேவைக்கட்டணம்** | | | |
| 5.43 | அறவிடக்கூடிய கட்டணம் | - | - | - | 5,000.00 |
| | **மொத்தம்** | **-** | **-** | **-** | **5,000.00** |
| | | **50 பிடியாணை மற்றும் தண்டப்பணம்** | | | |
| 5.51 | பிடியாணை கட்டணம் (தண்டப்பணம்) | 1,950.00 | 25,610.00 | 16,315.00 | 84,156.00 |
| | **மொத்தம்** | **1,950.00** | **25,610.00** | **16,315.00** | **84,156.00** |
| | | **60 வேறு வருமானங்கள்** | | | |
| 5.62 | சமனல வாவி கயாக் நுழைவுச்சீட்டு அச்சிடல் வருமானம | - | - | - | 100,000.00 |
| | **மொத்தம்** | **-** | **-** | **-** | **100,000.00** |
| | | **70 வருமான ஆதராங்கள்** | | | |
| 5.71 | ஊழியர் சம்பளம் திருப்பிச் செலுத்துதல் | 1,040,575.80 | 1,336,060.80 | 676,441.42 | 1,000,645.16 |
| | **மொத்தம்** | **1,040,575.80** | **1,336,060.80** | **676,441.42** | **1,000,645.16** |
| | | **80 மூலதன கிடைப்பனவு** | | | |
| 5.81 | பொதுச்சந்தை மேம்படுத்தல் | - | - | - | 2,500,000.00 |
| 5.82 | சுற்றுலா தலங்களை மேம்படுத்தல் | - | - | - | 2,000,000.00 |
| | **மொத்தம்** | **-** | **-** | **-** | **4,500,000.00** |
| **மொத்த தொகை** | | **2,658,385.80** | **3,168,120.80** | **1,414,316.42** | **14,182,361.16** |

# வேலைத்திட்ட இல 06 – நலன்புரிச் சேவைகள்

நலன்புரிச் சேவைகள் ஆறாவது வேலைத்திட்டமாகும். கேளிக்கை வரி, நூலக கட்டணம், நெனசல வருமானம் என்பன இதன் கீழ் அடையாளம் காணப்பட்டுள்ளன.

- **கேளிக்கை வரி (6.15)**

கேளிக்கை வரி கட்டளைசட்டத்தின் கீழ் கட்டணம் வசூலிக்கப்படுவதுடன் 2026 ஆம் ஆண்டில் ரூபா 50,000.00 வருமானம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

- **சேவைக்கான கட்டணம் (6.43)**

பிரதேச சபைக்குரிய நூலகங்களின் அங்கதுவத்தை பெறும் போது அறவிடப்படும் கட்டணங்கள் இதில் அடங்குகின்றது. 2026 ஆம் ஆண்டில் ரூபா 16,000.00 வருமானம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

- **பிடியாணை கட்டணம் (6.51)**

நூலகத்தால் வழங்கப்பட்ட புத்தகங்களை உரிய திகதிக்குள் திருப்பித் தரத் தவறியதற்காக விதிக்கப்படும் தாமதக் கட்டணங்கள் மூலம் 2026 ஆம் ஆண்டில் ரூபா 12,000.00 வருமானம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

- **தண்டப்பணம் (6.52)**

பிரதேச சபைக்குரிய நூலகங்களால் வழங்கப்படும் புத்தகங்கள் தொலைந்தால் விதிக்கப்படும் அபராதம் மூலம் 2026 ஆம் ஆண்டில் ரூபா 5,000.00 வருமானம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

- **நெனசல கிடைப்பனவு (6.62(2))**

இம்புல்பே உள்ளூராட்சி மன்றத்திற்கு சொந்தமான நெனசல நிறுவனத்தினால் அப்பிரதேசத்திலுள்ள சிறுவர்களின் கணனி அறிவை மேம்படுத்துவதற்காக சலுகை சேவைக் கட்டணத்தில் கணினி வகுப்புகள் நடத்தப்படுகின்றன. மேலும் நகல் எடுத்தல், இணைய சேவை வசதிகள் போன்ற சேவைகள் வழங்கப்படுவதுடன் இந்த சேவைகளை வழங்குவதன் மூலம் 2026 ஆம் ஆண்டுக்கான வருமானமாக ரூபா 50,000.00 என மதிப்பிடப்பட்டுள்ளது.

இது தவிர வருமான மூலங்கள் மற்றும் மூலதன கிடைப்பனவு என்பவற்றின் மூலம் 2026ஆம் ஆண்டில் ரூபா 4,318,070.85 வருமானம் மதிப்பிடப்பட்டுள்ளது.

| தலைப்பு | வருமான மூலங்கள் | 2023 உண்மை வருமானம் | 2024 உண்மை வருமானம் | 2025.06.30 உண்மை வருமானம் | 2026 மதிப்பீடு |
|---|---|---|---|---|---|
| | **10 வரிப்பணம் மற்றும் வரி** | | | | |
| 6.15 | கேளிக்கை வரி | 2,000.00 | 45,500.00 | 8,000.00 | 50,000.00 |
| | **மொத்தம்** | **2,000.00** | **45,500.00** | **8,000.00** | **50,000.00** |
| | **40 சேவைக்கான கட்டணம்** | | | | |
| 6.43 | சேவைக்கான கட்டணம் (நூலக அங்கத்துவ கட்டணம்) | 7,540.00 | 6,745.00 | 11,265.00 | 16,000.00 |
| | **மொத்தம்** | **7,540.00** | **6,745.00** | **11,265.00** | **16,000.00** |
| | **50 பிடியாணை மற்றும் தண்டப்பணம்** | | | | |
| 6.51 | பிடியாணை கட்டணம் (நூலக புத்தக தாமத கட்டணம்) | 5,070.00 | 26,545.00 | 1,920.00 | 12,000.00 |
| 6.52 | தண்டப்பணம் (நூலகத்தின் தொலைந்த புத்தகத்திற்கான தண்டப்பணம்) | 20,401.50 | 12,451.50 | 13,586.50 | 5,000.00 |
| | **மொத்தம்** | **25,471.50** | **38,996.50** | **15,506.50** | **17,000.00** |
| | **60 வேறு வருமானங்கள்** | | | | |
| 6.62(1) | விற்பனை (நூலக செய்தித்தாள், சஞ்சிகை) | 5,750.00 | 5,980.00 | 4,676.00 | 6,500.00 |
| 6.62(2) | நெசனல கிடைப்பனவு | 42,732.00 | 50,899.00 | 23,744.00 | 50,000.00 |
| | **மொத்தம்** | **48,482.00** | **56,879.00** | **28,420.00** | **56,500.00** |
| | **70 வருமான ஆதராங்கள்** | | | | |
| 6.71 | ஊழியர் சம்பளம் திருப்பிச் செலுத்துதல் | 1,583,477.08 | 2,063,828.74 | 1,471,004.98 | 2,678,570.85 |
